# எளிதாகக் கண்டுபிடிக்கத்தக்க கள்ள நோட்டுகளைக் கண்டுபிடிக்க உதவிக்குறிப்புகள்

U.S. CURRENCY
EDUCATION PROGRAM

நீங்கள் நோட்டைப் பெறும்போது விரைவாக ஒரு பார்வை பாருங்கள்.




அதில் வெளிநாட்டுக் கையெழுத்து இருந்தால் அது போலியாக இருக்கக்கூடும்.




அதில் **“For Motion Picture Use Only”** (திரைப்படப் பயன்பாட்டுக்கு மட்டுமே) என்ற சொற்கள் இருந்தால் அல்லது **“Replica”** (நகல்) என்ற சொல் இருந்தால் அது போலியாக இருக்கக்கூடும்.

ஒரு நோட்டு உண்மையானதா என்று தீர்மானிக்கச் சிறந்த வழி, அதன் பாதுகாப்பு அம்சங்களை நம்பியிருப்பதுதான். நீங்கள் ஒரு கள்ள நோட்டைப் பெற்றிருப்பதாக நினைத்தால், உங்கள் மிக அருகில் உள்ள அமெரிக்க உளவு அமைப்பு **(U.S. Secret Service)** கள அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துங்கள் அல்லது **uscurrency.gov/report-counterfeit** என்ற வலைத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

U.S. CURRENCY
EDUCATION PROGRAM

# இது உண்மை நோட்டா?
# உங்கள் நோட்டை அறியுங்கள்.



## தாளைத் தொட்டு உணருங்கள்

உங்கள் விரலை நோட்டின் மேல் வைத்து நகர்த்துங்கள். அது தாளின் **D;d;ekdk** நிகழ்முறையின் விளைவாலும் தாளின் தனித்துவமான அமைப்பாலும் சற்று சொரசொரப்பாக இருக்கும்.



## நோட்டை சாயுங்கள்

நோட்டை சாய்த்து, கீழ் வலது மூலையில் உள்ள எண்களில் உள்ள மை நிறம் மாறுவதைப் பாருங்கள். நடப்பு பாணியில் உள்ள நோட்டுகளில், நிறம் தாமிரத்திலிருந்து பச்சையாக



## வெளிச்சத்தில் வைத்துச் சோதியுங்கள்

நோட்டை வெளிச்சத்திற்கு எதிராக வைத்து, நீரோட்டக்குறியும் பாதுகாப்பு நூலும் நோட்டின் முன்னும் பின்னும் தெரிகிறதா என்று சோதியுங்கள்.

நடப்பு மற்றும் பழைய பாணி அமெரிக்க நோட்டுகளுக்குச் சான்றளிப்பது பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும் பயிற்சி வளங்களுக்கும் **uscurrency.gov** என்ற வலைத்தளத்திற்கு வருகை புரியுங்கள்.